

# திருத்தந்தை இரண்டாம் ஜான் பால்
# வழங்கிய
# விவிலியச் சிலுவைப்பாதை

**முதலாம் நிலை:** *இயேசு கெத்சமனித் தோட்டத்தில் செபிக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம். ஏனெனில் உமது புனிதச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்**

**நற்செய்தி : லூக்கா 22: 39-44**

**சிந்தனை:- நாம் தாழ்ச்சியோடும் பக்தியோடும் செபிக்க வேண்டும் என்ற உண்மையை நமதாண்டவர் இயேசு கெத்சமனித் தோட்ட நிகழ்வில் வலியுறுத்தியுள்ளார். நம் ஆண்டவராகிய இயேசு பக்தியோடும், வணக்கத்தோடும் மண்டியிட்டுக் குவித்தக் கரங்களோடு வான் நோக்கிச் செபிக்கிறார். ஆனால் நாம் பலசமயங்களில் அலைபாயும் மனத்தோடு நற்கருணை முன் இருக்கிறோம். இதனை சற்றும் கருத்தில் கொள்ளாது இருப்பதால் இறைவனின் ஆசீரைப் பெற நாமே தடையாக இருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்ப்போம். நாம் மன்றாட்டுக்களைக் கேட்க்கும் போது அது நன்மையாகவும், அண்டவரின் திருவுளத்திற்கு ஏற்றதாகவும் இருக்கிறதா எனச் சற்றுச் சிந்திப்போம்**

**செபம்:- அன்பு இயேசுவே!நாங்கள் தக்க முறையில் தாழ்ச்சியோடு உம்மை நோக்கி மன்றாட உமதருள் தாரும்.**

**இரண்டாம் நிலை:** *யூதாசு முத்தமிட இயேசு கைதுச் செய்யப்படுகிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 22: 47-48**

**சிந்தனை:- எங்கும் நன்மை செய்து வந்த இயேசுவைக் கள்வனைப் போல மாற்றிவிட்டான் இந்த யூதாசு. உடன் நண்பனாய் இருந்து துரோகியாக மாறினான் யூதாசு. இயேசுவை ஒரு பகைவனாகக் கருதினான். நாமும் கூட நமது குடும்பங்களில் நம்பிக்கைத் துரோகிகனாக மாறிவருகின்றோம். பண ஆசையே எல்லாப் பாவத்திற்கும் வர் என்பதை மறந்து நீதியைப் தவிர்த்து வாழும்போது நாமும் யூதாசாகத் தானே மாறிவிடுகிறோம். நன்றிகெட்டதனமும், நயவஞ்சமும் நம்மிடையே இருக்கிறதா சிந்திப்போம். எண்ணங்களைச் சீர்படுத்துபோம்.**

**செபம்:- நல்லோர் மேலும் தீயோர் மேலும் சூரியனை உதிக்கச் செய்யும் இறைவா! நான் ஒரு நம்பிக்கைத் துரோகியாகக் காணப்படுகிறேன். என் குடும்பத்தில் அலுவலகத்தில் துரோகச் செயலை செய்துள்ளேன். யூதாசின் முடிவைக்கண்டு அஞ்சுகிறேன். என்னை உண்மை உள்ளவனாக மாற்றும்.**

**மூன்றாம் நிலை:** *இயேசு தலைமைக்குருக்களால் தீர்ப்புக்குளாகிறார்*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 22: 66-70**

**சிந்தனை:- தம்மைப் பற்றிப் பேசியபோதெல்லாம் மௌனம் காத்த நமதாண்டவர் இயேசு இறைத்தந்தையைப் பற்றிப் பேசியவுடனே பதில் அளிக்கத் தவறவில்லை. நமது மகிமைக்கும், பெருமைக்கும் எதிராக வாதிட வாய்ப்புக் கிடைத்தால் வாதாடாமல் இருப்பதே நலம். ஆனால் இறை மகிமைக்காக இறைவனின் திருநாமம் அறிவிக்கப்படுவதற்காகப் பேச நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் நாம் எத்தனை முறை நமது குற்றங்களை மறந்துவிட்டுப் பிறரோடு புறங்கூறிப் பேசியுள்ளோம் என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம்.**

**செபம்:- அன்பு இயேசுவே! தீய பழக்கத்தை நாவை அடக்கி வாழ மனத்திடனைத் தாரும்.**

**நான்காம் நிலை:** *இயேசுவை பேதுரு மறுதலித்தார்*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 22: 54-60**

**சிந்தனை:- மறுதலிப்பது என்பது கோழைத்தனம். வாழ்விலும், சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாய் இருக்கிறேன் என்ற பேதுரு தான் கொடுத்த வாக்குறுதியில் நிலைத்திருக்கவில்லை. இன்று நாமும் கூட அப்படித்தான். சந்தர்ப்பவாதிகளாக மாறிக்கொண்டு வருகிறோம். சலுகைகள் கிடைக்கும் என்பதற்காகப் பெயரை மாற்றி இயேசுவை மறந்து வாழ்கின்றோம். சிந்திப்போம். நான் கடவுளை அறிந்துள்ளேன் என்று அறிக்கை செய்துவிட்டு நம்முடைய செயல்களால் அவரை நாம் மறுதலிக்கின்றோமா? அப்படியிருந்தால் நாம் அருவருக்கத்தக்கவர்களாக, கீழ்ப்படியாதவர்களாக, எந்த நற்செயலையும் செய்யத் தகுதியற்றவர்களாக மாறிவிடுகிறோம்.**

**செபம்:- ஆண்டவரே நான் ஒரு கோழை. தவறு செய்ய எனக்குத் தைரியமுண்டு. ஆனால் அதை ஏற்றுக் கொள்ளும் மனபக்குவம் என்னிடமில்லை. சந்தர்ப்ப வசத்தால் என்னையே மாற்றிக் கொள்ளும் இந்த நிலை மாற வலிமையும், பலமும் தாரும்.**

**ஐந்தாம் நிலை:** *இயேசுவுக்குப் பிலாத்து மரணதண்டனை விதிக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : மத்தேயு 27: 11-14**

**சிந்தனை:- நம் பொருட்டுக் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் நமது ஆண்டவரின் ஆழ்ந்தத் தாழ்ச்சியைப் பார்த்து நமது அகந்தையையும், ஆணவத்தையும் உலக நாட்டத்தையும் விலக்கி வாழ முன் வருகிறோமா? புண்ணியங்களின் வழியாய் மேன்மை அடைய வேண்டும் என்பதை உணர்த்தவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். மண்ணகத்தில் மனம்போன போக்கில் வாழ்ந்தால் விண்ணகத்தில் நமக்கு இடைமில்லை என்பதைச் சிந்தித்து வாழ்க்கையைச் சீர்படுத்துவோம்.**

**செபம்:- அன்பு இயேசுவே! நாங்கள் ஆணவம், கோபம் இவற்றை தவிர்த்து, நிந்தை அவதூறுகளைப் பொறுமையோடு ஏற்று தாழ்ச்சியில் தழைத்தோங்க வரம் தாரும்.**

**ஆறாம் நிலை:** *இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டு முள்முடி சூட்டப்பட்டார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : யோவான் 19: 1-3**

**சிந்தனை:- மன்னனின் மணிமுடிக்குப் பதிலாக முள் முடியை இயேசுவின் தலையில் வைத்தனர். பிரம்பால் தலையை அடித்தனர். இதனால் ஆண்டவர் இயேசு அடைந்த உடல் வேதனை உச்சநிலையை அடைகின்றது. துன்பத்திற்கு உள்ளான இயேசு அவமான நிலைக்கு தள்ளப்படுகின்றார். நம் ஆண்டவரின் அளவற்ற பொறுமையை எண்ணிப் பார்ப்போம். அற்பக் காரியத்திற்காக அயலான் மீது கோபம் அடையும் போதும், உள்ளத்தில் மன்னிக்க முடியாத பழிவாங்கும் பகைமையுணர்வை வளர்க்கும்போதும் நம் மீட்பர் இயேசுவின் தலையில் மீண்டும் முள்முடியை வைக்கின்றோம். சிந்திப்போம்.**

**செபம்:- இயேசுவே! நாங்கள் செருக்கு நிறைந்த எங்கள் இதயத்தையும், உலகக் காரியங்களில் அளவற்ற ஆசை கொண்ட எங்கள் உள்ளத்தையும் மாற்றி வாழ அருள் தாரும்.**

**ஏழாம் நிலை:** *இயேசு சிலுவையைச் சுமக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : யோவான் 19: 16-17**

**சிந்தனை:- எல்லா ஏற்பாடுகளும் முடிந்தபின் இயேசு சிலுவையைச் சுமந்தவராய் எருசலேம் நகர் வழியே செல்கின்றார். நாம் இவ்வுலகில் எத்தகைய வாழ்க்கைநிலையைத் தெரிந்துக் கொண்டாலும் நமக்கென்று உள்ள சிலுவைகள் நமக்கு வந்தே சேரும். சிலுவையின்றி மகிமையில்லை. நமக்கு வரும் சிலுவைகள் எவ்வளவு கடுமையாக உள்ளனவோ, அவ்வளவுக்கு இறைவன் நம்மை அன்புச் செய்கிறார். துன்பங்கள் சிலுவையின் மறையுண்மையை நமக்குத் தெளிவாய்க் காட்டுகின்றன. நமது சிலுவைகளை நாம் ஏற்றுக் கொள்ள முன் வருகிறோமா? சிந்திப்போம். நமது பயத்தைப் பொருட்படுத்தாமல் உலக இயல்பைத் தள்ளி விட்டு ஆண்டவர் காட்டும் இறையரசுப் பாதையில் பயணிக்க முயற்சிப்போம். இயேசுவின் பாடுகளே என்னைத் தேற்றுங்கள் என்று மன்றாடுவோம்.**

**செபம்:- ஆண்டவரே எங்கள் மீது கொண்ட அன்பால் அவமானத்தையும், அவதூறையும் அன்போடு ஏற்கத் திருவுளம் கொண்டீரே! நாங்கள் என்றும் உம்மையே நம்பவும் உமக்காக வாழவும் , உம்மோடு ஒன்றித்திருக்கவும் அருள் தாரும்.**

**எட்டாம் நிலை:** *இயேசுவுக்குச் சீமோன் உதவுகிறார்*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 23: 26**

**சிந்தனை:- சீமோனின் ஆன்மா ஆண்டவரின் அருள் வரத்தால் பற்றி எரியத் தொடங்குகிறது. இயேசுவின் சிலுவையை ஏற்க முன் வருகின்றார். சீமோனின் செயலைச் சிந்தித்துப் பாருங்கள். இயேசுவோடு விண்ணகவாழ்வைப் பெறவேண்டுமென்றால் அவரது சிலுவையை நாம் சுமந்துத் தானே ஆகவேண்டும். நாம் ஊனியல்பை எதிர்த்து நின்றால் தான் நமது சிலுவையை நாம் சுமக்க முடியும். வீழ்ச்சி அடைந்த மனித இயல்பை அடக்கி, இறைவன் அளிக்கும் துன்பத்தை ஏற்றால் தான் மீட்புப் பெற முடியும். நாம் இதுவரை இவ்வாறு வாழத் தவறியிருப்போமேயானால் இன்றே வாழ்வைத் திருத்தியமைப்போம். சிந்தித்துச் செயல்படுவோம்.**

**செபம்:- ஆண்டவரே எங்களது ஊனியல்புக்கு என்றும் நாங்கள் பலியாகாமல் பாதுகாத்தருளும். எங்களது உள்ளத்தில் எழும் தவறான ஆசைகளையெல்லாம் தகர்த்து ஜெயிக்கிட அருள் தாரும்.**

**ஒன்பதாம் நிலை:** *இயேசு வழியில் எருசேலம் பெண்களைச் சந்திக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 23: 27-29**

**சிந்தனை:- இயேசு தம் சிலுவையைச் சுமந்தவராய்த் தாங்க முடியாத வேதனையோடு நடந்து வருகின்றார். இயேசுவின் நிலைக் கண்டு எருசலேம் பெண்களின் உள்ளம் உருகத் தொடங்குகிறது. அவர்களைப் பார்த்து இயேசு தன் துன்பங்களை மறந்து அவர்கள் இருக்கும் நிலையை எடுத்தியம்புகிறார். பாவங்களுக்காக மனம் வருந்தி அழுங்கள் என்கிறார். இன்று இயேசு இதையே நமக்கும் கூறுகிறார். நமது பாவங்களை நினைத்து மனம் வருந்தி அழுவோம். அவரின் மன்னிப்பைப் பெற நம்மையே தயாரிப்போம்.**

**செபம்:- எங்கள் அன்பான ஆண்டவரே உமது பாடுகளை நினைத்தவர்களாய் எங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி உம் பாதம் வர வரம் தாரும்.**

**பத்தாம் நிலை:** *இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : யோவான் 19: 17-19**

**சிந்தனை:- இயேசுவின் திருக்கரங்களையும் திருப்பாதங்களையும் இரும்பாணிகளால் அறைகின்றனர். அவரது குருதி ஆறாய் ஒடுகின்றது. கடின உள்ளம் கொண்ட யூதர்கள் இயேசுவை இன்னும் கடுமையாத் துன்பறுத்துகின்றனர். நமது பாவங்களால் சிலுவையில் அறையப்பட்ட நமது மீட்பரைக் கண்ணோக்கிப் பார்ப்போம். பாறைகளான நமது மனங்கள் சிலுவையில் தொங்கும் செம்மறியைப் பார்த்துக் கரைகிறதா? பல சமயங்களில் நமது மீட்பரின் பாடுகளைப் பற்றி நினையாமல் வாழ்ந்திருக்கின்றோம். சிந்திப்போம். எண்ணத்தை உயர்த்துவோம்.**

**செபம்:- இயேசுவே! உமது திருஇரத்தத்தால் எங்களது இதயம் கழுவப்பட்டு நிறைவான வாழ்வை நோக்கிச் செல்ல வரம் தாரும்.**

**பதினொன்றாம் நிலை:** *இயேசு கள்வனுக்கு விண்ணக வாழ்வை அளிக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 23:39-43**

**சிந்தனை:- இயேசு மெய்யான இறைவன் என்று ஏற்றுத் தனக்கு வாழ்வுக் கொடுப்பார் என்று நல்ல கள்வன் நம்புகின்றான். நாம் தண்டிக்கப்படுவது முறையே என்ற சொல்வதின் மூலம் தன் பாவங்களை அறிக்கையிடுகின்றான். இயேசுவின் மாசில்லாத் தன்மையை எடுத்துச் சொல்லும் தூதுவனாகிறான். தனது வாழ்நாள் முழுவதும் தீயவழியில் வாழ்ந்த இவன் இறுதியில் விண்ணக வாழ்வையும் தேடிக் கொண்டான். இயேசு இரு கள்வர்களுக்கும் வேண்டுகிறார். ஆனால் ஒருவனே வாழ்வு பெறுகிறான். மற்றவன் வாழ்வை இழக்கின்றான். காரணம் கடவுளின் சொற்களுக்குக் காது கொடுக்கவில்லை. நாம் நமது இதயத்தில் எழும்பும் நல் உணர்வுகளுக்குச் செவிக் கொடுக்கமால் இருந்து வாழ்வை இழந்து விட்டோம் என்று ஏங்கிய தருணங்களை நினைத்துச் சிந்திப்போம்.**

**செபம்:- நல்ல இயேசுவே உமது கனிவானப் பார்வையை எங்கள் மீது திருப்பியருளும். எங்களது பாவத்தளைகளை அறுத்து விடதலை தாரும். உமக்காக உம்மைப்பின்பற்றி உம்மில் வாழ உதவிச் செய்தருளும்.**

**பனிரெண்டாம் நிலை:** *இயேசு தன் தாயிடம் பேசுகிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : யோவான் 19: 26-27**

**சிந்தனை:- இயேசு சிலுவையில் தாங்கமுடியாத வேதனையோடு தொங்கிக் கொண்டிருக்கின்றார், அந்நேரத்தில் தனது தாயை யோவான் வழியாக மனித இனம் முழுவதற்கும் தாயாகக் கொடுக்கின்றார். நம் அனைவரையும் தனது அன்னையின் பிள்ளைகளாகவும், வான் வீட்டின் உரிமையாளர்களாகவும் ஆகின்ற பேற்றைக் கொடுக்கின்றார். யோவான் அன்னை மரியாளைத் தம் வீட்டில் ஏற்றுக் கொண்டார். இன்று நாம் நமது இரத்த உறவானத் தாயை வீட்டில் ஏற்காமல் முதியோர் இல்லங்களில் விடுகிறோம். அம்மா என்று அழைப்பதன் பொருளை உணர்ந்துச் செயல்படுகிறோமா? நமக்குப் பிறப்புக் கொடுத்த தாய்க்கு நாம் எதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சிந்திப்போம். வாழ்வை மாற்றுவோம்.**

**செபம்:- என் அன்பு இயேசுவே! எங்கள் தாயின் உள்ளம் நோகாமல் தாய்க்குரிய சேய்களாக வாழ அருள் புரிவீராக.**

**பதிமூன்றாம் நிலை:** *இயேசு தன் சிலுவையில் மரிக்கிறார்*

**நற்செய்தி : யோவான் 19: 28-30**

**திவ்விய இயேசுவே! .....**

**சிந்தனை:- நம் ஆன்மா எதில் விருப்பம் கொண்டிருக்கிறது என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம். பிறர் நம்மைப் புகழ வேண்டும் என்றும் உலகைப் பற்றிய காரியங்களிலும் நமது காலத்தை வீணடித்து இறைவனை மறந்து வாழும் நாம் எந்த நிலையில் நமது ஆன்மாவை இறைவனிடம் ஒப்படைக்கப் போகிறோம்? அவர் நம்மை ஏற்றுக் கொள்ள நம்மிடம் என்ன தகுதி இருக்கிறது? சிந்திப்போம்.**

**செபம்:- என் இயேசுவே ! இறை விருப்பத்தின்படி எங்கள் ஆன்மாவைப் பண்படுத்தி, வான்வீட்டின் பேற்றைக் கொடையாகப் பெற அருள் தாரும்.**

**பதிநான்காம் நிலை:** *இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : மாற்கு 15: 43-46**

**சிந்தனை:- இயேசுவின் உடலைத் துயரோடும், அழுகையோடும் அடக்கம் செய்கிறார்கள். பன்மடங்கு பலன் தந்திட மீண்டும் துளிர்ந்து ஏழ வேண்டிய கோதுமை மணி மண்ணில் விதைக்கப்பட்டுள்ளது. ஒரு சிறு கல்லறையில் அடக்கம் செய்யத் திருவுளங்கொண்டார் என்பதைக் கேட்டு நமக்குப் பரிதாபமாக இருக்கலாம். நாம் இயேசுவைக் காண ஒடவேண்டும். அவரைக் காண நம்மிடம் உள்ள அகந்தை, ஆணவம், கோபம், பொறாமை இவற்றையெல்லாம் இயேசுவோடு சேர்த்துக் கல்லறையில் புதைத்து விடுவோம். புதைக்கின்றோமா? விதைக்கின்றோமா? சிந்திப்போம்.**

**செபம்:- எங்கள் இனிய இயேசுவே! உமது அருளுதவியால் உம்மோடு மரித்து உயிர்த்து உமக்கு ஊழியம் செய்வதில் ஒரு புதிய வாழ்வை கண்டு கொள்ள அருள் தாரும்.**

**பதினைந்தாம் நிலை:** *இயேசு உயிரத்தெழுந்தார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : மாற்கு 16: 4-6**

**சிந்தனை:-**
**சாவுக்கு இறுதி ஏற்புரை வழங்கிய கல்லறை**
**முன்று நாளுக்குப் பின் உயிர்ப்புக்கு**
**வரவேற்புரை ஏற்பாடுச் செய்து விட்டது.**

**இயேசுவின் உயிர்ப்பு நம்மைச் சுற்றி நிகழும் வன்முறைகளை அழித்து நன்மைகளை உயிர்ப்பிக்கச் செய்யட்டும். குப்பையாகக் குவிந்துக் கிடக்கும் சமூக அவலங்களை அழித்து நிமிர்ந்து நிற்கும் சமுதாயச் சாதனைகளை உயிர்ப்பிக்கட்டும். நமத தீயவழிதுறைகளை மண்ணில் புதைத்துவிட்டுநாமும் உயிர்த்து, சமூகத்தையும் உயிர்ப்பித்திட சபதம் ஏற்போம். வழி கிடைக்கும்.**

**செபம்:- எம் அன்பு இறைவா! எவையெல்லாம் நல்லவையோ அவைகள் அத்தனையிலும் உயர்த்தெழுந்து நிறைவாழ்வு நோக்கிப் பயணம் செய்ய உன்னருள் தாரும்.**

**தொகுத்தளிப்பவர்: அருள் சகோதரி ஷிலா, புனித அன்னாள் சபை - திருச்சி**

**www.anbinmadal.org**

**தனிச்சுற்றுக்கு மட்டும்**